# வணிகக்கல்வியும் கணக்கீடும்

## கணக்கீட்டு வழுக்களைத் திருத்துதல்

**அலகு : 12 செயலட்டை : 1 தவணை –3**

### கட்டமைப்பு வினாக்கள்

1. i. கணக்கீட்டில் வழுக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் 4 தருக ?

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

ii. பரீட்சை மீதியினை சமப்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தாத வழுக்கள் 4 தருக ?

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

iii. அ). பரீட்சை மீதியிலுள்ள கூட்டுத்தொகைகளின் வேறுபாட்டுத் தொகையை தற்காலிகமாக பதியும் கணக்கு எவ்வாறு அழைக்கப்படும் ?

…………………………………………………………………………..

ஆ). பரீட்சை மீதியின் வரவு நிரலின் கூட்டுத் தொகை ரூபா 270000 ஆகவும் செலவு நிரலில் கூட்டுத்தொகை ரூபா 260000 ஆகவும் காணப்பட்டதெனின் தொங்கல் கணக்கின் எப்பக்கத்தில் பதியப்பட வேண்டும்.

…………………………………………………………………………………

iv. பரீட்சை மீதி தயாரிக்கும் போது ஏற்படும் வழுக்கள் 3 தருக ?

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

v. அ). பரீட்சை மீதியில் வேறுபாடு காணப்படும் போது அது பரீட்சை மீதியில் ஏற்படும் வழுவாக இருந்தால் பேரேட்டுக் கணக்கினைத் திருத்தஞ் செய்ய வேண்டி வருமா?

…………………………………………………………………………………

ஆ). காரணம் தருக ?

…………………………………………………………………………………

### பகுதி 11

01. “ வல்லிபுரா” நிறுவனத்தின் கணக்கேடுகளில் 31.03.2015 இல் பரீட்சை மீதியைத் தயார் செய்த போது பரீட்சை மீதி இணங்கவில்லை. வித்தியாசம் 9250/= தொங்கல் கணக்கில் வரவு வைக்கப்பட்டு பரீட்சை மீதி தற்காலிகமாக சமப்படுத்தப்பட்டது. பின்னர் பின்வரும் வழுக்கள் ஏடுகளில் நிகழ்ந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

1. காப்புறுதிக்குச் செலுத்திய 4250.00 காப்புறுதிக் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை.
2. கடன்கொடுத்தோரான கண்ணனுக்கு கொடுத்த காசு 2500.00 அவர் கணக்கில் செலவு வைக்கபட்டிருந்தது.
3. விளம்பரச் செலவாக செலுத்திய 5000.00 ஏடுகளில் முழுமையாக விடுபட்டிருந்தது.
4. கொள்வனவுக் கணக்கிலும் விற்பனைக் கணக்கிலும் 100.00 கூடுதலாகக் காணப்பட்டது.
5. பெற்ற சில்லறை வருமானம் 1510.00 ஏடுகளில் 1150.00 என பதியப்பட்டிருந்தது.

உம்மிடம் வேண்டப்படுவது

1. வழுக்களைத் திருத்துவதற்கான திருத்த நாட்குறிப்புப் பதிவுகள்
2. தொங்கல் கணக்குகள்

02. கீழ்காணும் பரீட்சைமீதி வசந்தம் நிறுவனத்தில் 31.12.2014 இல் தயாரிக்கப்பட்டதாகும்.

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| மூலதனக் கணக்கு | | 525000 |
| விளம்பரச் செலவு கணக்கு | 5000 | |
| விற்பனைக் கணக்கு | | 310000 |
| கொள்வனவுக் கணக்கு | 22000 | |
| தளபாடக் கணக்கு | 21000 | |
| மோட்டார் கணக்கு | 25000 | |
| கடன்பட்டோர் கணக்கு | 45500 | |
| கடன்கொடுத்தோர் கணக்கு | | 35250 |
| வங்கிக் கடன் கணக்கு | | 100000 |
| சம்பளக் கணக்கு | 15000 | |
| வங்கிக் கணக்கு | 139500 | |
| காசுக்கணக்கு | 80000 | |
| தொங்கல் கணக்கு | 5250 | |
| | 970250 | 970250 |

இப் பரீட்சை மீதி தயார் செய்து தொங்கல் கணக்கினூடாக தற்காலிகமாக சமப்படுத்திக் கொள்ளப்பட்ட பின்னர் பின்வரும் வழுக்கள் ஏடுகளில் நிகழ்ந்திருப்பது கண்டு கொள்ளப்பட்டது.

1. காசு விற்பனை அம்சமான 40000.00 ஏடுகளில் முழுமையாக விடுபட்டிருந்தது.
2. ஒரு ஊழியருக்கு செலுத்திய சம்பளம் 5250.00 சம்பளக் கணக்கில் பதியப்பட வில்லை.
3. தளபாடதிருத்தச் செலவு 10000.00 தளபாடக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
4. கொள்வனவு நாளேட்டின் கூட்டுத்தொகை 10000.00 ஆல் குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது.
5. பெற்ற சில்லறை வருமானம் 10000.00 அக் கணக்கில் செலவு வைக்கப்படவில்லை.

உம்மிடம் வேண்டப்படுவது

1. திருத்த நாட்குறிப்புபதிவுகள்
2. தொங்கல் கணக்கு
3. திருத்தத்தின் பின் பரீட்சைமீதி